வைத்தியம் செய்துவிட்டு, பிறகு கொஞ்சம் சரியான வகையிலே நிலைமைகள் ஏற்பட்டதற்கு பிறகு, அந்த இடத்திலேயிருந்து காசநோய் மருத்துவ மனைக்கு டிரான்ஸ்ஃபர் செய்து, அந்த இடத்திலே அவர்களுக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை, அந்த அளவு நல்ல வகையிலே தான் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படுக்கைகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அவைகளை யெல்லாம் அவசியமாகக் கவனிப்போம்.

(முற்பகல் 10—20)

தேனித் தொகுதியில் நகரப் பேருந்து வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள்.

*வினா எண். 430 : திரு. வே இரா .ஜெயராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி—ஒண்டப்பட்டி, தேனி—கோவிந்தநகரம், கம்பம்—எரசக்கநாயக்கனூர், கம்பம்—புலிகுத்தி ஆகிய வழித்தடங்களில் கூடுதல் நகரப் பேருந்து வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தேனி—கோவிந்தநகரம் வழித்தடத்தில் மட்டும் இரண்டு கூடுதல் பேருந்துகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதர மூன்று வழித்தடங்களிலும் தற்போது உள்ள போக்குவரத்து வசதியே போதுமானதாக உள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்துப்பணி:

* வினா எண். 431 : திரு ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்து விடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.